**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 3/2022** **Date:10.04.2026.**

**(DW2)- ராஜேஷ்**

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் தரகர் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். நாளது தேதி வரை எத்தனை நபர்களுக்கு தரகராக இருந்து சொத்து முடித்துக்கொடுத்துள்ளேன் என்றால் 7 முதல் 8 நபர்களுக்கு முடித்து கொடுத்துள்ளேன். தாவா சொத்தை தரகராக முடித்துக்கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் இந்த சொத்தை முடித்து கொடுக்கவில்லை. தாவா சர்வே எண்கள் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சாட்சியம் அளிக்க வேண்டி ஆவணங்களை பார்த்து தெரிந்துக்கொண்டேன். யார் என்னை சாட்சியம் அளிக்க வேண்டி ஆவணங்களை பார்க்க சொன்னார்கள் என்றால் பிரதிவாதி பார்க்க சொன்னார். என்ன ஆவணம் பார்த்தேன் என்றால் பட்டாவை மட்டும் பார்த்தேன்.

2. பட்டாவில் என்ன குறிப்பிட்டு இருந்தது என்றால் சர்வே எண் மட்டும் பார்த்தேன். பிரதிவாதி எந்த சர்வே எண் சொத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எதன் அடிப்படையில் சொன்னேன் என்றால் பட்டாவின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். சிவானந்ததாஸ் பெயரில் உள்ள பட்டாவை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. சிவானந்ததாஸ் மற்றும் அவரது சகோதரர் செய்துக்கொண்ட பாகப்பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. எனவே L வடிவத்தில் உள்ள பாதை குறித்தும் அதன் அளவுகள் குறித்தும் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. மேற்படி பாதை குறித்து எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அங்கு விளையாட செல்வேன் அப்போது தெரியும். எந்த சொத்தில் நான் விளையாடுவேன் என்றால் L வடிவ பாதை தொடங்கும் இடத்தில் உள்ள சொத்தில் விளையாடுவேன். மேற்படி சொத்து தற்போது யார் கைவசம் உள்ளது என்றால் பிரதிவாதி கைவசம் உள்ளது.

3. மேற்படி பாதையின் தொடக்கத்தில் இருதூண்கள் உள்ளது என்றால் காம்பவுண்ட் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி சுவரில் கேட் போடுவதற்கு கம்பி நடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் விளையாடும் சொத்துக்கள் பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளதா என்றால் ஒரு இடத்தில் மட்டும் முள்வேலி போட்டு

இருந்தது, அது யாருடைய இடம் என்று தெரியாது. எனக்கு தாவா இடம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதி அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் சரியல்ல.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**